பொன்னேரி

# வேலம்மாள் மெட்ரிக் பள்ளி 100 சதவித தேர்ச்சி





▶ எம். கோபிகா ஸ்ரீ ▶ ஏ.ஆப்ரின் ▶ ஜி.சாய்ராமன்

திருவள்ளூர், மே 18:பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடந்த பிளஸ் 2 தேர்வில் 1163 பேர் தேர்வு எழுதினர். இதில் அனைத்து பேரும் முதலிடத்தில் தேர்ச்சி பெற்றனர். வேதியியல், உயிரியல் பாடத்தில் மாநில அளவில் 3ம் இடத்தையும், மாவட்ட அளவில் 2ம் இடத்தையும் பிடித்து சாதனை படைத்துள்ளது.

மாணவி எம்.கோபிகாஸ்ரீ தமிழ்-198, ஆங்கிலம்-194, இயற்பியல்-199, வேதியியல்-200, உயிரியல்-200, கணிதம்-200 என 1191 மதிப்பெண்கள் பெற்று பள்ளியளவில் முதலிடம் பிடித்துள்ளார்.

மாணவி ஏ.ஆப்ரின் தமிழ்-198, ஆங்கிலம்-192, கணிதம்-199, இயற்பியல்-199, வேதியியல்-200, உயிரியல்-200 என மொத்தம் 1188 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடத்தை பிடித்தார்.

மாணவன் ஜி.சாய்ராமன் தமிழ்-197, ஆங்கிலம்-194, கணிதம்-199, இயற்பியல்-199, வேதியியல்-197, கணினி அறிவியல்-200 என 1186 மதிப்பெண் பெற்று 3ம் இடத்தை பிடித்துள்ளார்.

கணிதத்தில் 50, உயிரியல் 29, வேதியியல் 24, வணிக கணிதம் 16, கணக்கு பதிவியல் 10, வணிகவியல் 5, கணினி அறிவியல் 3, பொருளியல் ஒருவர் என மொத்தம் 138 பேர் 200க்கு 200 மதிப்பெண் பெற்றுள்ளனர்.

சாதனை படைத்த மாணவ, மாணவியர்களை வேலம்மாள் கல்விக் குழுமத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம், இயக்குனர் எம்.வி.எம்.சசிகுமார், முதல்வர் ஜி.ஆர். சாந்தி, துணை முதல்வர் ஆர்.லாவண்யா வாழ்த்தினர்.

## மாவட்ட அளவில் பேரம்பாக்கம் அரசு பள்ளி மாணவி முதலிடம்

கடம்பத்துார், மே 18-

பேரம்பாக்கம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிமாணவி, ஆர்.குணபிரியா, 1,185 மதிப்பெண்கள் பெற்று, மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். அவர் பெற்ற மதிப்பெண்கள் விவரம்.

| | |
|---|---|
| தமிழ் | 198 |
| ஆங்கிலம் | 188 |
| கணிதம் | 200 |
| இயற்பியல் | 190 |
| வேதியியல் | 196 |
| உயிரியல் | 195 |
| மொத்தம் | 1,185 |

என் பெற்றோர் ரத்தினம் – சூசையம்மாள். என் தந்தை மளிகை கடை வைத்துள்ளார். மருத்துவராக சேவை செய்யவே விருப்பம்.



ஆர்.குணபிரியா

## மாவட்ட அளவில் 2ம் இடம் பெற்ற மாணவி

பொன்னேரி, மே 18-

பஞ்செட்டி, வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி, எம்.கோபிகாஸ்ரீ, 1,191 மதிப்பெண்கள் பெற்று, திருவள்ளூர் மாவட்டத்தில் 2ம் இடம் பெற்றுள்ளார். அவர் பெற்ற மதிப்பெண்கள் விவரம்:

| | |
|---|---|
| தமிழ் | 198 |
| ஆங்கிலம் | 194 |
| கணிதம் | 200 |
| இயற்பியல் | 199 |
| வேதியியல் | 200 |
| உயிரியல் | 200 |
| மொத்தம் | 1,191 |

என் பெற்றோர் திருவேங்கிடபாபு – சுகிதா. ஆசிரியர் மற்றும் பெற்றோர், வழிகாட்டுதலாக இருந்தனர். மருத்துவம் படிக்க உள்ளேன்.



எம்.கோபிகாஸ்ரீ

## செயின்ட் ஜோசப் பள்ளி மாணவி மாவட்டத்தில் மூன்றாம் இடம்

பூந்தமல்லி, மே 18-

பூந்தமல்லி செயின்ட் ஜோசப் பள்ளி மாணவி காயத்ரி, 1,190 மதிப்பெண்கள் பெற்று, திருவள்ளூர் மாவட்டத்தில் மூன்றாம் இடம் பெற்றுள்ளார். அவர் பெற்ற மதிப்பெண்கள் விவரம்:

| | |
|---|---|
| தமிழ் | 197 |
| ஆங்கிலம் | 196 |
| பொருளியல் | 200 |
| வணிகவியல் | 199 |
| கணக்கு பதிவியல் | 198 |
| வணிக கணிதம் | 200 |
| மொத்தம் | 1,190 |

என் பெற்றோர் புண்ணிய கோடி – சாந்தி. என் தந்தை மின்சார வாரியத்தில் பணி புரிந்து வருகிறார். சி.ஏ.,வாக ஆவதே என் விருப்பம்.



காயத்ரி



■ திருவள்ளூர் மாவட்டத்தில், பிளஸ் 2 பொதுத்தேர்வில் சாதனை படைத்த மாணவ, மாணவியருக்கு, ஆட்சியர் சுந்தரவல்லி பரிசு வழங்கினார். அருகில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சீதாலட்சுமி, துணை ஆட்சியர் (பயிற்சி) திவ்யஸ்ரீ.

# மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவிகள்

திருவள்ளூர், மே 17: திருவள்ளூர் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவிகளை மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி பாராட்டினார்.

திருவள்ளூர் மாவட்ட அளவில், திருவள்ளூர் ஸ்ரீ நிகேதன் பள்ளியைச் சேர்ந்த மாணவி ஜி.பவித்ரா 1,194 மதிப்பெண் பெற்று மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் மாநில அளவில் 2-ஆம் இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பஞ்செட்டி வேலம்மாள் பள்ளியைச் சேர்ந்த மாணவி கோபிகாஸ்ரீ 1,191 மதிப்பெண் பெற்று மாவட்ட அளவில் 2-ஆம் இடத்தையும், பூந்தமல்லி செயின்ட் ஜோசப் மெட்ரிக். பள்ளியைச் சேர்ந்த மாணவி காயத்ரி 1,190 மதிப்பெண் பெற்று மாவட்ட அளவில் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

இதுகுறித்து கோபிகாஸ்ரீ கூறியதாவது:

எனது தந்தை திருவேங்கடம் ரயில்வே துறையில் பணிபுரிந்து வருகிறார். தாய் சுகிதா அரசுப் பள்ளி ஆசிரியையாக உள்ளார். 10-ஆம் வகுப்பில் 495 மதிப்பெண் பெற்றேன். சிறுவயது முதல் எனக்கு மருத்துவராக வேண்டும் என்ற கனவு உள்ளது. அதை லட்சியமாக மாற்றி படிப்பில் கவனம் செலுத்தினேன். எனது முயற்சிக்கு ஆசிரியர்களும், பெற்றோரும் மிகவும் உறுதுணையாக இருந்தனர். ஒரு நாளைக்கு 4 முதல் 5 மணி நேரம் வரை படித்தேன்.


## ஆட்சியர் பாராட்டு



பவித்ரா



கோபிகாஸ்ரீ



காயத்ரி



இன்று மாவட்ட அளவு ரேங்க் கிடைத்துள்ளது. இனி என் மருத்துவக் கனவு எளிதாக நடக்கும் என நம்புகிறேன் என்றார்.

இவர் தமிழில் 198, ஆங்கிலத்தில் 194, இயற்பியலில் 199, வேதியியலில் 200, உயிரியலில் 200, கணிதத்தில் 200 மதிப்பெண் பெற்றுள்ளார்.

மூன்றாம் இடத்தைப் பிடித்த மாணவி காயத்ரி கூறியதாவது:

எனது தந்தை புண்ணியகோடி மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வருகிறார். தாய் குடும்பத் தலைவி. சிறுவயது முதல் கணக்கில் ஆர்வம் உள்ளதால் சிஏ படித்து ஆடிட்டராக வேண்டும் என லட்சியம் வைத்திருந்தேன். அதன்படி படிப்பதற்கு நேரம், காலம் பார்க்காமல் கிடைக்கும் நேரத்தில் படித்தேன். எனது படிப்புக்கு ஆசிரியர்களும், பெற்றோரும் மிகவும் உறுதுணையாக இருந்தனர்.

தற்போது சிஏ படிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. அந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெறுவேன் என்றார்.

மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி பரிசு வழங்கிப் பாராட்டினார்.

மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுடன் மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி.

# பாட வாரியாக முதலிடம் பிடித்தவர்கள்

தமிழ்: 1.வி.ஆர்த்தி, கே.எச்.ஜஸ் வந்த், ஊத்தங்கரை, ஸ்ரீவித்யா மந்திர் மெட்ரிக் மேனிலைப் பள்ளி-199.
2.எஸ்.ஜெனிபர் ஜெயநந்தினி, நாமக்கல் பொதுப்பட்டி, கிரீன்பார்க் பெண்கள் மேனிலைப் பள்ளி-199.
3.கே.கீர்த்தனா, நாமக்கல் பொதுப்பட்டி, கிரீன் பார்க் பெண்கள் மேனிலைப் பள்ளி-199.

ஆங்கிலம்: 1.எஸ்.சங்கீதா, ஒசூர், ஸ்ரீவித்யாலயா மெட்ரிக் மேனிலைப் பள்ளி-198.
2.எம்.எஸ்.தர்மா, பர்கூர் வேளாங்கண்ணி மெட்ரிக் மேனிலைப் பள்ளி-198.
3.எம்.அக்ஷயா, திருவண்ணாமலை மாவட்டம் இனாம்கரியந்தல், சிஷ்யமெட்ரிக் மேனிலைப் பள்ளி-198.

இயற்பியல்: 1.வி.விக்னேஷ், ஈரோடு ஐடியல் நகர், ஐடியல் மேனிலைப் பள்ளி-200
.2.வி.ஆர்.தனுஷ் , ஊத்தங்கரை ஸ்ரீவித்யாமந்திர் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, 200.
3.கே.வைஷ்ணவகுமார், ஊத்தங்கரை ஸ்ரீவித்யாமந்திர் மெட்ரிக் மேனிலைப் பள்ளி-200

வேதியியல்: 1.வி.விக்னேஷ், ஈரோடு ஐடியல் நகர், ஐடியல் மேனிலைப் பள்ளி-200.
2.வி.ஆர்த்தி, கே.,எச்.ஜஸ் வந்த், ஊத்தங்கரை ஸ்ரீவித்யா மந்திர் மெட்ரிக் மேனிலைப் பள்ளி 200.
3.எம்.கோபிகாஸ்ரீ. பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக் மேனிலைப் பள்ளி-200 , ஆர். அக்ஷயா, தர்மபுரி, ஸ்ரீவிஜய் வித்யா பெண்கள் மேனிலைப் பள்ளி,-200.

உயிரியல்: 1.வி.விக்னேஷ், ஈரோடு ஐடியல் மேனிலைப் பள்ளி-200
2.வி.ஆர்த்தி,கே.எச்.ஜஸ்வந்த், ஊத்தங்கரை, ஸ்ரீவித்யாமந்திர் மெட்ரிக்மேனிலைப் பள்ளி, -200.
3.எம்.கோபிகாஸ்ரீ, பொன்னேரி வேலம்மாள் மெட்ரிக்மேனிலைப்பள்ளி, ஆர். அக்ஷயா, தர்மபுரி ஸ்ரீவித்யா விஜய் பெண்கள் மேனிலைப் பள்ளி-200

தாவரவியல்: 1.எஸ்.ஜெபிஷாலீ வால்ட், திருவட்டார், எக்செல் மேனிலைப் பள்ளி-200 2.எஸ்.லியோனல் லின்போர்டு ஜோஸ், திருவட்டார், எக்செல் மேனிலைப் பள்ளி-200 3.எஸ்.ஆலன்டேவிட், திருவட்டார், எக்செல் மேனிலைப் பள்ளி-200.

விலங்கியல்: 1.எஸ்.ஜி.நேகா பரிமள், மதுரை வாடிப்பட்டி, தாய் மெட்ரிக் மேனிலைப் பள்ளி-200.
2.எஸ்.ஜெபிஷாலிவால்ட், திருவட்டார், எக்செல் மேனிலைப் பள்ளி-200.
3.ஆஷிகா பாலமுருகன், புதுவாயல், சிவகங்கை, ஸ்ரீவித்யா கிரி மெட்ரிக் மேனிலைப் பள்ளி-200.

கணினி அறிவியல்: 1.எஸ்.ரேவதி, நாமக்கல் மாவட்டம், கந்தம்பாளையம், காந்தி மெட்ரிக் மேனிலைப் பள்ளி-200
2.ஜெ.ரித்து அவிலா, கோவை மாவட்டம், எஸ்.எஸ்.குளம், கே.வி. மெட்ரிக்மேனிலைப் பள்ளி-200.
3.ஆர்.தமிழ் மலர், புதுச்சேரி, இமாகுலேட் இதய மேரி பெண்கள் மேனிலைப் பள்ளி200.

கணக்கு: 1.வி.விக்னேஷ், ஈரோடு ஐடியல் மேனிலைப் பள்ளி-200.
2.எம்.டி.நிவேதிதா, திருவண்ணாமலை மாவட்டம், ஒண்ணுபுரம் அரசு மேனிலைப் பள்ளி-200.
3.வி.ஆர்த்தி, கே.எஸ்.ஜஸ் வந்த், ஊத்தங்கரை, ஸ்ரீவித்யாமந்திர் மெட்ரிக் மேனிலைப் பள்ளி-200.

வணிகவியல்: 1.டி.ஜெ.சத்ரியாகவின், 'சென்னை கல்லூரி சாலை, குட்ஷெப்பர்டு மெட்ரிக் மேனிலைப் பள்ளி, 200.
2.எஸ்.சுருதி, சென்னை கல்லூரி சாலை, குட்ஷெப்பர்டு மெட்ரிக் மேனிலைப் பள்ளி, ஜி.பவித்ரா, திருவள்ளூர் ஸ்ரீநிகேதன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி200.
3. ஜி.நவீன், ஈரோடு திண்டல் பாரதி வித்யாபவன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, , என். நிவேதிதா, ஆதம்பாக்கம் நியூ பிரின்ஸ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கே.சம்ரித, கோவை சரவணப்பட்டி, விமல்ஜோதி கான்வெண்ட் மெட்ரிக் மேனிலைப் பள்ளி 200.

கணக்குப்பதிவியல்: 1.டி.ஜெ.சத்ரியா கவின் சென்னை, கல்லூரி சாலை, குட்ஷெப்பர்டு மெட்ரிக் மேனிலைப் பள்ளி--200.
2. எஸ்.சுருதி, சென்னை, கல்லூரி சாலை, குட்ஷெப்பர்டு மெட்ரிக் மேனிலைப் பள்ளி, ஜி.பவித்ரா திருவள்ளூர் ஸ்ரீநிகேதன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி-200.
3.ஜி.நவீன், ஈரோடு திண்டல், பாரதி வித்யாபவன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, என். நிவேதிதா, ஆதம்பாக்கம் நியூ பிரின்ஸ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கே.சம்ரிதா கோவை, சரவணப்பட்டி, விமல்ஜோதி கான்வெண்ட் மெட்ரிக் மேனிலைப் பள்ளி-200.